# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புதிய நடைமுறைகள் அமுலுக்கு வருகின்றன.

வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளிகளினதும் பொதுமக்களினதும் நன்மை கருதி எதிர்வரும் 2020 ஜனவரி 1 முதல் வைத்தியசாலையில் பின்வரும் நடைமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளன.

- வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அனைத்து நோயாளிகளினதும் விபரங்கள் கணனி மயப்படுத்தப்பட்டு ஒவ்வொரு நோயாளருக்கும் நோயாளர் சுகாதார அட்டை வழங்கப்படவுள்ளது. இவ் அட்டையில் நோயாளியின் விபரங்களும் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற காலங்கள் போன்றனவும் உள்ளடக்கப்பட்டிருக்கும். மேலும் இவ் அட்டை மூலம் குறித்த நோயாளி எந்தவொரு சந்தர்பத்திலும் இவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படலாம்.

  எதிர்வரும் காலங்களில் வைத்தியசாலையில் முழுமையான கணனி கட்டமைப்பு செயற்படுத்தப்படும் போது நோயாளருக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள், வைத்திய பரிசோதனை அறிக்கைகள் போன்ற சகல விடயங்களும் அந்த அட்டையினுள் உள்ளீர்க்கப்படும்.

- இதுவரை வைத்தியசாலையினுள் நோயாளர்களை பார்வையிடுபவர்களுக்காக வழங்கப்பட்டு வந்த உள்நுளைவுக்கான அனுமதி அட்டை நடைமுறை மேலும் இலகுவாக்கப்படுகிறது. ஐந்து நாட்களுக்கு மட்டும் செல்லுபடியாகும் பார்வையாளர் உள்நுளைவு அனுமதி அட்டைகள், நோயாளிகளை வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசரசிகிச்சைப் பிரிவிலிருந்தே வழங்கப்படும்.

  இவ் உள்நுளைவு அனுமதி அட்டையில் நோயாளரின் விபரங்கள் உள்ளீர்க்கப்பட்டிருக்கும். நோயாளி நீண்ட காலம் வைத்தியசாலையில் தரித்திருப்பாராயின் ஒவ்வொரு ஐந்து நாட்களுக்கொருமுறை இவ் அனுமதி அட்டைகள் புதுப்பித்து வழங்கப்படும்.

- வைத்தியசாலை வளாகத்தின் பல பகுதிகளிலும் பொதுமக்கள் முறைப்பாட்டுப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும். எனவே தமக்கு அசாதாரணம் இளைக்கப்பட்டதாக கருதும் எந்தவொரு இலங்கை பிரஜையும் அந்த முறைப்பாட்டு பெட்டிகளினுள் தமது முறைப்பாட்டை பதிவுசெய்யமுடியும்.

  பொதுமக்களின் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டதிலிருந்து முறைப்பாடுகளின் தன்மைக்கேற்ப உடனடி நடவடிக்கை எடுப்பதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆகவே குற்றச்சாட்டுக்களை சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வைத்தியசாலையின் சேவைகளுக்கு இடையூறு ஏற்படும் விதத்தில்

பிரச்சார பேசுபொருளாக மாற்றுவதை விடுத்து, வைத்தியசாலையின் முறைப்பாட்டு பொறிமுறையினுள் நுழைந்து ஆக்கபூர்வமான முறைப்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் முறையான நியாயத்தை பெற்றுக்கொள்ளுமாறும் வைத்தியசாலையின் சேவைகளை மேலும் திறம்பட செயற்படுத்த உதவுமாறும் பொதுமக்களும் நலன்விரும்பிகளும் வேண்டப்படுகின்றார்கள்.

- வைத்தியசாலையில் இடம்பெறும் அத்தனை விடயங்கள் குறித்தும் விளக்கங்களை பெற்றுக்கொள்ள வைத்தியசாலையின் இணையதளத்தை நாடமுடியும்.

  அதற்கு மேலதிகமாக ஊடக மத்திய நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டு பொதுமக்கள், நலன்விரும்பிகள், சமூக வலைத்தள எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுகள் வழங்கப்படும். ஆகவே வைத்தியசாலை குறித்த விடயங்களை பிரசுரிக்க விரும்பும் எவரும் அந்த விடயங்களை வைத்தியசாலை ஊடக பிரிவனூடாக உறுதிப்படுத்திய பின்பு அவற்றை பிரசுரிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

- வைத்தியசாலை ஊழியர்கள் இலஞ்சம்பெறுதல், ஊழலில் ஈடுபடுதல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.

  எனவே, எந்தவொரு ஊழியருக்கும் கையூட்டு வழங்கலும், வழங்க முற்படுதலும், அந்த ஊழியர்களின் அனுசரணை பெற்று சேவை முன்னுரிமை பெறுவதும் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டு குறித்தநபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

- வைத்தியசாலை வளாகம் முழுவதும் பாதுகாப்பு காரணங்களுக்காக கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் செயற்படுமாறு வேண்டப்படுகிறார்கள்.

  மேற்குறித்த அத்தனை விடயங்களையும் கருத்தில்கொண்டு வைத்தியசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் நோயாளர் நலன்சார்ந்து மேலும் தரமான சுகாதார சேவையை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து தரப்பினரையும் வைத்தியசாலை நிருவாகம் அன்புடன் வேண்டிக்கொள்கிறது.